**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **CC.182/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.1 பாண்டி** |
| **Father's Name** | : **தவசி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி:

நான் இ.புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சாட்சிப்பட்டியலிலுள்ள சாட்சிகள் 2 முதல் 6 வரையிலானவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இ.புதுப்பட்டி, தொ.விலக்கு சமுதாயக்கூடத்தில் வசந்தவிழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தோம். அதில் சாட்சி பாலகிருஷ்ணன் மொய் வாங்கும் இடத்தில் அமர்ந்து நிகழ்ச்சி வந்தவர்களர் கொடுத்த மொய் பணத்தை வாங்கிக்கொண்டிருந்தார். அவர் அருகே சாட்சி செந்தில் அமர்ந்து மொய் பணத்தை நோட்டில் வரவு வைத்துக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரி ரவி சில்லறை கேட்பது போல் வந்து சாட்சி பாலகிருஷ்ணனிடம் ஆயிரம் ரூபாய் காண்பித்து இரண்டு தடவை சில்லறை கேட்டு வாங்கிவிட்டு ஆயிரம் ரூபாயை கொடுக்காமல் ஏமாற்றி விட்டார். கேட்டதற்கு முதலிலேயே ரூபாயை கொடுத்துவிட்டோம் என்று சமாளித்தார்கள். மற்றொரு எதிரி இரண்டு ஐநூறு ரூபாய் தாள்களை கொடுத்து சில்லறை கேட்டுள்ளார். சாட்சி பாலகிருஷ்ணன் சில்லறையை கொடுத்து விட்டு ரூபாயைக் கேட்டதற்கு முன்பு சொன்னது போலவே முதலில் ரூபாயை கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளார். நான் அருகே வரவேற்பில் நின்று

கொண்டிருந்தேன். சாட்சி பாலகிருஷ்ணன் என்னிடம் இவர்கள் யார் என்றும், பத்திரிக்கை நீங்கள் கொடுத்தீர்களா என்றும் கேட்டார். நான் கொடுக்கவில்லை என்றும், இவர்கள் யார் என்று தெரியவில்லை என்றும் சொன்னேன். உடனே எதிரிகள் ரோட்டின் அருகே நிறுத்தி வைத்திருந்த அம்பாசிட்டர் காரில் ஏறி சென்று விட்டனர். சாட்சி சிவக்குமாரும், எனது அப்பா சாட்சி தவசியும் அவர்களை துரத்திக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். நானும், சாட்சி செந்திலும் மற்றொரு இருசக்கர வாகனத்தில் சிறிது நேரம் கழித்து சென்றோம். எங்களுக்கு முன்னால் சென்ற சிவக்குமாரும், தவசியும் எதிரிகளை பேரையூர் ரோட்டில் அரசு மருத்துவமனை முன்பு மடக்கி பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். நானும், செந்திலும் காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகளை பார்த்தோம். அங்கு இரண்டு ஆண்களும், நான்கு பெண்களும் காவல்நிலையத்தில் இருந்தார்கள். நான் காவல்நிலையத்தில் புகார் மனு எழுதி கொடுத்தேன். எதிரிகள் ஏமாற்றிய பணம் ரூபாய் இரண்டாயிரத்தை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். நான் கொடுத்த புகார் மனு **அசாஆ1**. நாங்கள் ஏற்பாடு செய்திருந்த புதுமனை புகுவிழா அழைப்பிதழ் **அசாஆ2**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பணத்தை நான் பெற்றுக்கொண்டேன். புகைப்படம் மற்றும் சிடி **சாபொ1**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாட்சி பாலகிருஷ்ணன் மற்றும் சாட்சி செந்தில்குமார் உங்களது பெரியப்பா மகன்கள் என்று சொன்னால் சரிதான். புதுமனை புகுவிழா அழைப்பிதழை அனைத்து சமுதாய நபர்களுக்கு கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரிதான். விஷேச அழைப்பிதழில் 11.00 மணிக்கு புதுமனை புகுவிழா நடைபெறும் என குறிப்பிட்டுள்ளதால் அந்த நேரத்தில் நிறைய நபர்கள் அங்கு வந்து போனார்கள் என்று சொன்னால் சரிதான். மொய் எழுதிக்கொண்டிருந்த சாட்சி பாலகிருஷ்ணன் மற்றும் செந்தில் நீங்கள் இருந்த இடத்திலிருந்து 10அடி தூரத்தில் மொய் எழுதிக்கொண்டிருந்தார்களா என்றால் 2அடி தூரத்தில் மொய் எழுதிக்கொண்டிருந்தார்கள். இரண்டு முறை ஆயிரம் ரூபாய் நோட்டுகளை காட்டி பணம் வாங்கியதாக சொன்ன 3வது எதிரி ரவி, மற்றும் 4வது எதிரி அம்சவள்ளி நக்கலப்பட்டியில் திருமணம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3வது எதிரி இரண்டு முறை ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை காட்டி சில்லறை வாங்கிய விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது

என்று சொன்னால் சரிதான், சாட்சி பாலகிருஷ்ணன் மொய் எழுதிக்கொண்டிருந்ததால் அவர் சொல்லி எனக்கு தெரியும். மற்றொரு எதிரி ரூபாய் ஐநூறைக் காட்டி சில்லறை வாங்கிய விபரம் சாட்சி பாலகிருஷ்ணன் சொல்லித்தான் உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். ஒரு நபர் ஒரு முறை ஆயிரம் ரூபாயைக்காட்டி சில்லறை கொடுக்காதபோது மறுபடியும் ஆயிரம் ரூபாயைக்காட்டி சில்லறை கேட்டால் கொடுக்கமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒரு நபரிடம் இரண்டாயிரம் ரூபாயும், மற்றொரு நபரிடம் இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்கும் சில்லறை கேட்டு ஏமாந்ததாக சொல்லியுள்ள நீங்கள் காவல்நிலையத்தில் எவ்வளவு பணத்தை பெற்றுக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல, இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்களை மறுபடியும் எதிரிகள் மாற்ற வரும்போது சந்தேகத்தின் பேரில் சில்லறை கொடுக்காமல் நிறுத்தினோம். நீங்கள் சொன்னதுமாதிரி எந்தயொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அப்படி நடைபெற்றிருந்தால் விஷேசத்திற்கு வந்த அனைத்து நபர்களும் அவர்கள் பிடித்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. 3வது ரவி, 4வது எதிரி அம்சவள்ளி, 7வது எதிரி மாயி ஆகியோர் உங்கள் ஊருக்கு அருகேயுள்ள நக்கலப்பட்டியில் திருமணம் முடித்துள்ளார் என்பதால் அவர்களுக்கும், உங்களுக்கும் முன்பகை இருந்து வந்ததால் விஷேச நிகழ்ச்சிக்கு வந்திருந்த நபர்களை அங்குள்ள நபர்கள் குடித்துவிட்டு தகராறு செய்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மொய் எழுதும் நபர்கள் 1.00மணிக்கு பின்பு தான் மொய் பணத்தை ஒப்படைப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. மொய் பணத்தை ஒப்படைக்கும் வரை வரவேற்பு அறையில் நின்றுகொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.
ம.வி.இல்லை.

S.d./ Pandi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.